*பிரசங்கம் 2*

# இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட அவர்

## (1 கொரிந்தியர் 2:1, 2)

*பவுல் கொரிந்துப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்த பொழுது "பலவீனத்தோடும், பயத்தோடும், நடுக்கத்தோடும்" இருந்தார் (1 கொரிந்தியர் 2:3). அவருடைய உணர்வுகள் புரிந்துக் கொள்ளக் கூடியதே. துரோவாவைவிட்டு, மக்கதோனியாவுக்கு கடந்துவந்த பொழுது (16:8-12), சில வெற்றிகளையும், எண்ணிமுடியாத பின்னடைவுகளை கிரேக்கருக்கு[1] பிரசங்கம் பண்ணும்படியான முயற்சிகளில் கண்டார். பிலிப்பியிலே அவர் சிறையிலே அடைக்கப்பட்டு அடிக்கப்பட்டார் (நடபடிகள் 16:22-40), யூதர்களால் தெசலோனிக்கேயாவில் துன்புறுத்தப்பட்டார் (நடபடிகள் 17:5-9) பெரோயாவிலும் (நடபடிகள் 17:13, 14) அப்படியே துன்புறுத்தப்பட்டு, இயேசு கிறிஸ்துவை தேவன் உயிர்த்தெழப் பண்ணினார் என்ற உண்மையை அத்தேனியர்களை ஏற்றுக் கொள்ளச்செய்வதில் சிறிய அளவு வெற்றியைக் கண்டார் (நடபடிகள் 17:31-34). பின்னர் அவர் செல்வச் செழிப்பு மிக்க பட்டணமான கொரிந்துவில் நுழைந்தார் - அது ஒரு வேளை இன்றைய நியூயார்க் பட்டணத்தைப் போன்றது. இந்த வர்த்தகப் பட்டணம் வெகு காலமாக அக்கிரமச் செயல்களுக்கு பேர் பெற்ற பட்டணமாயிருந்தது. பவுல் பயப்பட்டதில் ஆச்சரியமில்லை![2]*

*அப்படிப்பட்டச் சூழ்நிலைகளில் அவர் என்ன செய்தார்? ஒரு பிரசங்கியாராக, கிறிஸ்துவின் செய்தியோடு கொரிந்தியர்களை அடைய அவர் என்ன திட்டம் பண்ணினார்?*

*1 கொரிந்தியர் 2:1, 2ல்; சொல்லுகிறார்: "சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்."*

*கொரிந்துவில் மட்டும் தனது ஊழியத்திற்காக பவுல் எடுத்த புதிய தீர்மானமல்ல இது. அவர்எங்குச் சென்றாலும், கூடிவரும் கூட்டத்தார் சிறப்பாகப் புரிந்து கொண்ட அதே செய்தியை எடுத்துக் கொண்டு பிரசங்கித்தார்.[3] மனமாற்றம் பெற்றவுடனே, ஜெப ஆலயங்களில் இயேசுவை அறிவித்து, அவரே தேவனுடைய குமாரன் என்று சொல்லியும் (நடபடிகள் 9:20). அவர் தான் கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தினார். அவர் பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்த ஜெப ஆலயத்தில் அவர் பிரசங்கித்தபோது, (நடபடிகள் 9:22) கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதையும் மரித்தோரிலிருந்து அவர் எழுந்ததையும் பிரசங்கித்தார் (நடபடிகள் 13:26-41). தெசலோனிக்கேயில் அவர்*

*பிரசங்கித்தபோது, "கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும்," அந்த இயேசுவே கிறிஸ்து என்றும் பிரசங்கித்தார் (நடபடிகள் 17:3). மார்ஸ்மேடையில் கிரேக்க தத்துவ ஞானிகளிடம், இயேசு கிறிஸ்துவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று பிரசங்கித்தார் (நடபடிகள் 17:30, 31). ஆகையால், கொரிந்துப் பட்டணத்துக்கு பயணம் பண்ணிப்போய் பெரிய பட்டணமாகிய அங்கிருந்த ஜனங்களை அடைய உபத்திரவங்களைச் சந்தித்தார்; எப்பொழுதும் போல தீர்மானித்தவராய்: கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையே பிரசங்கித்தார்.*

*நாம் அவரது முன் மாதிரியை பின்பற்ற வேண்டியவர்கள். நாம் எங்கு பிரசங்கித்தாலும், அங்கு கூடிவரும் கூட்டம் எப்படிப் பட்டதாயிருப்பினும், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பற்றியே பிரசங்கிக்கவேண்டும். நான் அநேகமாநிலங்களிலும் அநேக வெளிநாடுகளான - கனடா, ஆஸ்திரேலியா, தைவான், போலந்து, வங்காளதேசம், மற்றும் நியூஸிலாந்து போன்ற நாடுகளில் பிரசங்கித்திருக்கிறேன் - ஆனால் எனதுசெய்தி எப்போதும் பவுலைப் போன்று: "கிறிஸ்து, மற்றும் சிலுவையில் அறையப்பட்ட அவரையே" பிரசங்கிப்பேன்.*

## கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்

*''கிறிஸ்துவை, மற்றும் சிலுவையில் அறையப்பட்ட அவரையே'' பிரசங்கிப்பது என்றால் என்ன? முதலில், நாம் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க வேண்டும்!*

### *அவருடைய ஜீவிய வரலாறைச் சொல்லுங்கள்*

*கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்பது அவருடைய வாழ்க்கை வரலாறைக் கூறுவது. அவர் கன்னிகையாகிய மரியாளிடத்தில் பிறந்தார் (மத்தேயு 1:18-21) அவர் தனது பன்னிரண்டாவது வயதில் தனது பெற்றோருடன் எருசலேம் சென்றது, தேவாலயத்து மதகுருமார்கள் வியக்கத்தக்க உரையாடியதையும் கூறுங்கள் (லூக்கா 2:41-52). அவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தில் மரியாளுக்கும் தச்சனாகிய யோசேப்புக்கும் மகனாக வளர்ந்தார்; அவருக்குச் சகோதரர்களும் சகோதரிகளும் இருந்தார்கள், அவர்தாமே தச்சனானார் (மாற்கு 6:3). அவர் ஒரு முழுமனுஷீகமுள்ளவராய் "நம்மைப்போல் எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டார், இருந்தும் பாவமில்லாதவராய் இருந்தார்" (எபிரேயர் 4:15). அவர் மனுஷனாக இருந்தும் பாவமில்லாதவராக வாழ்ந்தார்.*

*தமது முப்பதாவது வயதில், தமது ஒன்றுவிட்ட சகோதரனாகிய யோவான் ஸ்நானகனிடத்தில் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார் (மத்தேயு 3:13-17). அவர் வனாந்தரத்தில் பிசாசினாலே நாற்பது நாளளவும் சோதிக்கப்பட்டார், ஆகிலும் சோதனையில் விழாமல் அதை மறுதலித்தார் (மத்தேயு 4:1-11). அவர் பன்னிரண்டு மனுஷர்களைத் தமக்கு அப்போஸ்தலராக இருக்கும் பொருட்டு தெரிந்தெடுத்து, தம்மோடே கூட பயணிக்கவும், தம்மிடத்தில் கற்றுக்கொள்ளவும், தமது வார்த்தைகளை மற்றவர்களுக்குப் போய் போதிக்கவும் ஒழுங்கு படுத்தினார் (மத்தேயு 4:18-22; மாற்கு 3:13-19). இயேசு மூன்றாண்டு கால ஊழியத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, வியாதியஸ்தர்களைக் குணமாக்கவும், பிசாசுகளை விரட்டவும், ஜனங்களுக்குப் போதிக்கவும் தமது நேரத்தைச் செலவிட்டார். அவர் திரளான ஜனங்களுக்கும்*

தமது சீஷர்களுக்கும் போதித்தார் (மத்தேயு 9:35). கொர்நெலியு வீட்டாரிடத்தில் பேசும்போது இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தை சுருக்கமாகச் சொல்லுவதாவது: "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்"; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (நடபடிகள் 10:38).

இயேசு உரிமைகோரிய காரியங்களினிமித்தம் அவர் மீது கோபமுற்ற யூதர்களின் தூண்டுதல் பேரில், ரோமர் வெற்றிகரமாக அவரை கொலைசெய்து, அவர் மரித்ததுடன் இயேசுவின் (பூமிக்குரிய) ஊழியம் முடிவுற்றது. அவருடைய மரணத்தைத் தொடர்ந்து அவர் மகிமையடையவுமான சம்பவங்கள் நிகழ்ந்தன (நடபடிகள் 2:32-36). அவர் பரமேறிச் செல்வதற்கு முன், தமது பிரதானக் கட்டளையில் "புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்று சொன்னார் (மத்தேயு 28:19).

அவரது வாழ்க்கை வரலாறை அறிந்து கொள்ளும் போது, நாம் அவரை பின்பற்றும்படியாக உந்தப்படுகிறோம். இரக்கமுள்ள ஒருவரது அழைப்பை ஏற்காமல் ஒருமனிதன் எப்படி புறக்கணிக்க முடியும் (மத்தேயு 11:28-30)? அதோடு கூட "அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும்படி," உற்சாகப் படுத்த வேண்டும் (1 பேதுரு 2:21).

**அவர் தேவனுடைய குமாரனென்றும் மனுக்குலத்தின் இரட்சகர் என்றும் அறிவியுங்கள்**

கிறிஸ்துவை பிரசங்கிப்பது அவர் தேவனுடைய குமாரன் என்றும் மனுக்குலத்திற்கான ஒரே ஒரு இரட்சகர் என்றும் அறிவிப்பதையும் கொண்டுள்ளது. அவர் தேவனுடைய குமாரன் என்று சுட்டிக்காட்டும்படி அவரது அற்புதங்கள் அடையாளமாக்கப்பட்டன (யோவான் 20:30, 31). தேவன் தாமே இயேசுவைத் தமது குமாரனென்று அடையாளப் படுத்தினார் (மத்தேயு 3:17; 17:5). பேதுரு அவரை அறிக்கையிட்டு, "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகியகிறிஸ்து" என்று சொன்னான் (மத்தேயு 16:16), இரட்சிக்கப்பட ஜனங்கள் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10:9). இப்படி அநேகர் அறிக்கையிட்டனர் (உதாரணமாக, யோவான் 1:49ஐக் காண்க). இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று சொல்லி தாம் தெய்வீகமானவர் என உரிமை கொண்டாடினார் (யோவான் 10:33-36; மற்றும் 8:24, 58ஐயும் காண்க). அவருடைய உயிர்த்தெழுதல் அவருடைய தெய்வீகத்திற்கு ஒரு முழுமையான ஆதாரம் (நடபடிகள் 2:32-36; ரோமர் 1:4). இயேசு ஒரு நல்ல மனிதர் என்றும், ஆகிலும் அவர் தெய்வமல்ல என்று கூறும் எந்த ஒரு கண்ணோட்டமும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் திருமறை கூறும் கண்ணோட்டத்தில் வீழ்ச்சியடைந்ததே.

இயேசு கிறிஸ்துவை பிரசங்கிப்பதில், நாமும் கூட அவரே இரட்சகர் மனிதக்குலத்துக்கான ஒரே நம்பிக்கை என்பதை முன் வைக்க வேண்டும். பேதுருவைப் போல நாமும், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின்கீழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவுமில்லை" (நடபடிகள் 4:12) என்று சொல்ல வேண்டும். தேவனிடத்தில் போக ஒரே வழி அவர்தான்

என்பதை நாமும் உணர்த்த வேண்டும் (யோவான் 14:6).

### அவரை கர்த்தர் என்று முன்வையுங்கள்

இயேசுவை தேவனுடைய குமாரனென்றும் அவர் நம்முடைய இரட்சகர் என்றும் அறிவிப்பதோடு, அவரைக் கர்த்தர் என்றும் நாம் முன்வைத்து பிரசங்கிக்க வேண்டும். “இயேசுவை தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்” என்று (நடபடிகள் 2:36). பேதுரு அறிவித்தார் (ரோமர் 10:9).

‘‘கர்த்தர்’’ எனும் தலைப்பு எதை ஆலோசனையாகக் கூறுகிறது? இயேசுவின் தெய்வீகத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு அடுத்து (யோவான் 20:28), “கர்த்தர்” எனும் வார்த்தை இயேசுவின் மாட்சிமையையும், அவருடைய அதிகாரத்தையும், அவரது எஜமானரும் ஆளுகை செய்பவருமாயிருக்கிறார் என்று அது குறிப்பிடுகிறது. “தேவன் தமக்கு” “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொடுத்திருப்பதாக” இயேசு சொன்னார் (மத்தேயு 28:18; 7:28, 29யும் காண்க). அவர் தமது இராஜ்யத்தின் இராஜா (யோவான் 28:36, 37) சபைத் தலையாயுமிருக்கிறார். தேவன் “எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, ... நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்” (எபேசியர் 1:22, 23).

இயேசு தாம் அன்புகூருகிற தமது சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறார், அதற்காகவே அவர் மரித்தார் (எபேசியர் 5:25). கிறிஸ்துவை பிரசங்கிக்கிற நாமும் அவருடைய பிரியமான சரீரமாகிய சபையைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும். மேலும் புதிய ஏற்பாட்டின் மூலமாக, சபைக்கான வழிகாட்டலை கொடுக்கும் படிக்கும் - சபைக்கு அவரே ஆண்டவராக இருக்கத்தக்கதாகவும் சபையின் ஆராதனை, ஆளுகை அமைப்பு, அதன் உபதேசக்கோட்பாடுகள் அனைத்துக்கும் அவருடைய வழிகாட்டலுக்கு இடமளிக்க வேண்டும். கிறிஸ்துவே இரட்சகராக இருக்கிறபடியினாலே, நாம் அவருடைய அதிகாரத்தையும், உபதேசத்தையும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்; புதிய ஏற்பாடு போதிப்பதை நாம் செய்ய வேண்டும்!

மேலும், சபையின் தனிப்பட்ட அங்கத்தினர்களாய் இருக்கும் நாம், கிறிஸ்துவை நமது வாழ்க்கைக்கும் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். “கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இடத்திலுள்ள மேலானவைகளையே தேடவேண்டும்” (கொலோசெயர் 3:1). கிறிஸ்துவின் சித்தத்திற்கேற்ப வாழ்வதே கிறிஸ்துவின் அதிகாரத்துக்குக் கீழ் வாழ்வதாகும். இன்னொரு வார்த்தையில் சொன்னால், கிறிஸ்துவை கர்த்தர் என்று பிரசங்கிப்பது சபையும் தனிப்பட்ட கிறிஸ்தவர்களும் கர்த்தரான கிறிஸ்து எதைச் செய்ய சொல்லுகிறாரோ அதைப் போதிக்க வேண்டும்.

### அவரை வருகிற நியாயாதிபதியாக அறிவியுங்கள்

கிறிஸ்து மறுபடியும் வருகிறார்என்றும், அவர் வரும்போது மனித வர்க்கத்தை நியாயந்தீர்ப்பார் என்றும் நாம் அறிவிக்க வேண்டும். இயேசு பரமேறி பரலோகத்தில் மகிமையடைந்ததுடன் அவரது வரலாறு முடிவடைய வில்லை. அவர் மறுபடியும் வருகிறார் (நடபடிகள் 1:11)! எனவே கிறிஸ்து மறுபடி வருகிறார் என்பதை மறுதலிக்கும் எந்த உபதேசமும், அவருடைய மார்க்கத்துக்கு எதிரான கொள்கை.

*இயேசு மறுபடியும் வரும்போது, உலகத்தை நியாயந்தீர்ப்பார் (நடபடிகள் 17:31; மத்தேயு 25:31-46), அப்பொழுது "தேவனை அறியாதவர்களுக்கும், ... சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும்" நீதியுள்ள ஆக்கினையை செலுத்துவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9; KJV). கிறிஸ்துவும் இரண்டாம் வருகையும் அவருடைய நியாயாதிபதி ஸ்தானமும் புதிய ஏற்பாட்டின் (ஆரம்ப) நாட்களிலிருந்த பாவிகளுக்கும் பரிசுத்தவான்களுக்கும் பிரசங்கிக்கப் பட்டது. உதாரணமாக, பவுல் பேலிக்ஸினிடத்தில் பேசியபோது, "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையுங் குறித்து பேசினான்" (நடபடிகள் 24:25; மற்றும் நடபடிகள் 17:30, 31யும் காண்க). இதன் விளைவாக "பேலிக்ஸ் பயந்தான்." பாவிகள், கிறிஸ்துவின் நியாயஸ்தலத்துக்கு முன்பாக தோன்ற வேண்டியதைக் குறித்து பயப்பட வேண்டும். எப்படியாயினும், விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய வருகையைக் குறித்து பயப்பட வேண்டியதில்லை; அது அவர்களின் இரட்சிப்புக்கான நாள் (எபிரேயர் 9:28)! கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் அவருடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கலாம் (2 தீமோத்தேயு 4:7, 8) இயேசுவே வாரும் என்று நேர்மையாய்ச் சொல்லலாம் (வெளிப்படுத்தின விசேஷம் 22:20; 1 கொரிந்தியர் 16:22 யும் காண்க[4]). இயேசுவை நமது நியாயாதிபதியாக சித்தரித்துக் காட்டாத எந்த வார்த்தையும் முழுமையடையாததும், நடக்காததுமானவை.*

## கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதை பிரசங்கித்தல்

*பவுல் கொரிந்துவில் கிறிஸ்துவை மட்டும் பிரசங்கிக்காமல் "கிறிஸ்து ... சிலுவையில் அறையப் பட்டதையும்" பிரசங்கித்ததாகக் குறிப்பிடுகிறார். நாம் பவுலை பின்பற்றுகிறவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் மரணத்தையும் அறிவிக்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும். "கிறிஸ்து ... சிலுவையில் அறையப் பட்டதை" பிரசங்கிப்பது என்றால் என்ன (1:23)?*

### சிலுவைச் செய்தியைச் சொல்லுங்கள்

*ஆதியிலிருந்தே, கிறிஸ்துவின் மரணத்தின் சிறப்பை அநேகர் புரிந்து கொள்ளவில்லை. அவருடைய மரணத்தினாலேயன்றி, நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்குவேறே எதுவுமில்லை.*

*பைத்தியமாய்த் தோன்றும் செய்தியல்ல.* *முதல் நூற்றாண்டில் செய்திகளைக் கேட்டவர்கள் சிலுவையைப் பற்றிய உபதேசத்தை மதியீனமாய்க் கருதினார்கள் (1 கொரிந்தியர் 1:23). சிலுவையில் அறையப்படும் மனுஷன் - நியாயப்பிரமாணத்தின்படி சபிக்கப்பட்டவனாயிருப்பான் என்பதால் - கிறிஸ்துவும் அப்படியே எனும் நினைவில் யூதர்கள் இடறலடைந்தார்கள். சிலுவையில் அறையப் பட்டவரை இரட்சகர் என்று போதிப்பதை பைத்தியமாய்க் கண்டார்கள். சிலுவையைப் பற்றிய உபதேசம் இன்றைய மக்களுக்கும் அறிவுப்பூர்வமானதாய்த் தெரியவில்லை. அவர்கள் ஆச்சரியப்பட்டு, "இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு மரித்த ஒரு மனிதனின் மரணம் எனக்கு என்ன செய்யக் கூடும்" என்றனர்.*

*எப்படியாயினும், மனிதனின் மனதுக்கு புத்தியீனமாய்த் தோன்றினாலும்,*

பவுலுடன் சேர்ந்து நாமும் உறுதியாக சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுவோருக்கு பெலனாயிருக்கிறது என்று சொல்லுவோம் (1 கொரிந்தியர் 1:18).

*இரத்த சாட்சியாய் இறந்துபோன ஒருவரின் செய்தியல்ல.* பெயருக்கு விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கு (பெயர் கிறிஸ்தவர்களுக்கு) கூட. கிறிஸ்துவின் மரணம் சரியான அர்த்தம் கொடுப்பதில்லை. அவர்கள் சிலுவையை அர்த்த புஷ்டியுடன் பார்க்கலாம், ஆகிலும் அதினுடைய உண்மையான பொருளை அவர்களால் காண இயலவில்லை. *பலிகளின் முழுமையான ஒரு பலியாக பாவமற்ற ஒருவர் தனக்காக பலியாக்கப்பட்டதாக அவர்கள் பார்க்கலாம்.* அப்படி இருந்தாலும் அதற்கும் மேலான ஒரு பொருள் அதற்கு உண்டு. வருஷங்களினூடே நூற்றுக் கணக்கானவர்கள் வித்தியாசப்பட்ட காரணங்களுக்காக மரித்திருக்கிறார்கள். ஒரு உயர்ந்த நோக்கத்திற்காக பாடுபட வேண்டிய மாதிரிக்காக மட்டும் இயேசு மரித்திருப்பாரானால், அவருடைய மரணம் ஒப்புவமையற்றதாக இருக்க முடியாது. இருப்பினும், இயேசுவின் மரணம் வித்தியாசமானதாக இருந்தது!

*பாவ-பலி என்ற வகையில் இயேசுவைப்பற்றி ஒரு செய்தி:* இயேசு பாவத்துக்காக பாவமில்லாத பலியாக மரித்தார், எனவே - அவருடைய மரணத்தின் மூலமாக - நம்முடைய பாவத்திலிருந்து அவர் நம்மை மீட்க முடியும். நாம் நம்முடைய பாவங்களைச் சுமக்காத படியும், அதனால் ஆக்கினைக்குள்ளாகாதபடியும், அவர் நம்பாவங்களைத் தம்மேல் எடுத்துக் கொண்டார். நாம் பட்டிருக்க வேண்டிய பாடுகளை அவர் பட்டார். வசனங்களின் சாட்சியங்களை சிந்தித்துப் பாருங்கள்:

- யோவான் ஸ்நானகன் இயேசுவை "உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று சொன்னார் (யோவான் 1:29).
- 2 கொரிந்தியர் 5:21ல், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை [கிறிஸ்துவை] நமக்காக [தேவன்] பாவமாக்கினார்" என்று சொல்லப்படுகிறது.
- கிறிஸ்துவானவர் "வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 15:3ஆ).
- எபிரேயர் 9:26, "அப்படியல்ல, அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்" என்று சொல்லுகிறது.
- 1 பேதுரு 2:24ல் பேதுரு, "நாம் பாவங்ளுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர்தாமே (கிறிஸ்து தாமே) தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்று சொன்னார்.
- வெளிப்படுத்தின விசேஷம் 1:5, 6ல், இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் "உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கும் அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மைக் கழுவினார்" என்று சொன்னார்.
- வெளிப்படுத்தின விசேஷம் 7:14ல், "... இவர்கள்

*மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" என்று மீட்கப்பட்டவர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.*

*"சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை" பிரசங்கிப்பது, இயேசுகிறிஸ்து நமது பாவநிவாரணப்பலி என்றும், நமது பாவங்களுக்காக நிவாரணம் அளித்தார் என்றும் பிரசங்கிப்பது: "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2; மேலும் 1 யோவான் 4:10; ரோமர் 3:25ஐயும் காண்க).*

**சிலுவையின் செய்தியை பயன்படுத்துங்கள்**

*இன்று சிலுவையின் செய்தி எப்படி பயன்படுகிறது? "கிறிஸ்து சிலுவையில்" அறையப்பட்டதை பிரசங்கிப்பது என்பது, "நற்செய்தியை" பிரசங்கிப்பது. சிலுவையின் செய்தி எல்லாருக்குமே நற்செய்தி. உங்களுக்கு இது நல்ல செய்தி ஏனெனில் - கணக்கொப்புவிக்கும் பிராயத்தில் நீங்கள் இருப்பீர்களானால் தனிப்பட்ட முறையில் - நீங்கள் பாவியாயிருக்கிறீர்கள் (ரோமர் 3:23). உங்களுடைய பாவங்களினால், நீங்கள் மரண ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப் பட்டிருக்கிறீர்கள் (ரோமர் 6:23; எபேசியர் 2:1). கிறிஸ்து மரிக்காதிருந்திருப்பாரேயாகில் உங்களுக்கு நம்பிக்கை இல்லாதிருந்திருக்கும். உங்களுக்காக அவர் மரித்தபடியினாலே உங்களுக்கு நம்பிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. உங்களை நீங்களே இரட்சித்துக் கொள்ள - நீங்கள் என்ன செய்திருக்கக் கூடும் - என்பதை கிறிஸ்து உங்களுக்காகச் செய்திருக்கிறார்; நீங்கள் கட்டித் தீர்க்க முடியாத உங்கள் கடனைக் கொண்டிருந்தீர்கள்; தாம் பாத்தியப் படாத கடனுக்காக,[5] நீங்கள் பட வேண்டிய பாடுகளை அவர் பட்டு, உங்களுக்காக அவர் சிலுவையில் மரித்து, அந்தக் கடனை அடைத்தார்கள். அவர் அப்படிச் செய்ததினால், நீங்கள் இரட்சிக்கப் பட்டீர்கள். உங்கள் பாவங்கள் எப்படிப் பட்டதாக இருந்திருப்பினும் சரி, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே அவைகள் கழுவப்பட முடியும்!*

*கிறிஸ்துவின் மரணத்தால் அளிக்கப் பட்டுள்ள இரட்சிப்பின் ஈவை ஏற்றுக் கொள்ள நீங்கள் என்ன செய்ய வேண்டும்? "இயேசு உங்களுடைய இருதயங்களில் வரவேண்டும்" என்றோ, அல்லது "இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்ற கட்டளையோ திருமறையில் கொடுக்கப்பட வில்லை. கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப் பட்டதுமான செய்தியை கேட்டு விசுவாசித்தவர்களுக்கு அது சொல்லுவது என்ன? "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38). கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்கள் - இயேசுவை விசுவாசித்து, அவர் தேவனுடைய குமாரன் என்று அவருக்குள் கொண்டிருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்து, மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றால் - தேவனுடைய கிருபையால் தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார்!*

*நீங்கள் இரட்சிக்கப்பட முடியும்! ''கிறிஸ்துவும், அவர் சிலுவையில் அறையப்பட்டதுமான செய்தியில் ஊற்றெடுத்து வரும் நற்செய்தி இதுவே''!*

## முடிவுரை

*''கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப் பட்டதுமான'' செய்தியை நீங்கள் கேள்விப்பட்ட பிறகு, உங்களுடைய பிரதிபலிப்பு என்ன?முதல் நூற்றாண்டிலிருந்து, இன்றுவரை அநேகருக்கு இந்தச் செய்தி பைத்தியமாய் இருந்ததுபோல, உங்களுக்கும் அது பைத்தியமாய்த் தோன்றுகிறதா? 1 கொரிந்தியர் 1:18 சொல்லுகிறது, "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாய் இருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது." இந்த செய்தியை நீங்கள் விரும்பினால் இந்த செய்தியை பரியாசம் பண்ணலாம், ஆனால் நீங்கள் அதை பைத்தியமாய் காணுகின்ற வரைக்கும், நீங்கள் இரட்சிக்கப் படாமலேயேதான் இருக்கப் போகிறீர்கள். மறுபுறம் பார்த்தால், இந்தச் செய்தியை ஏற்றுக் கொள்பவர்களுக்கு அதை தங்களின் இரட்சிப்புக்கு தேவ பெலனாய்க் காண்பார்கள். நீங்கள் எதை தெரிந்து கொள்வீர்கள்? சிலுவையைப் பற்றிய உபதேசத்தை பைத்தியமாய்க் கண்டு உங்கள் பாவங்களில் இழந்து போனவர்களாய்க் காணப்படுவீர்களா, அல்லது அதை உண்மை எனக் கண்டு இரட்சிக்கப் படுவீர்களா?*

---

*குறிப்புகள்*

*[1]அத்தனே பட்டணத்து மக்களோடு மக்கதோனியர்களையும் "கிரேக்கர்" என்றே இங்கு எடுத்துக் கொள்ளும்படி ஆலோசிக்கிறோம். [2]அவர் பயந்தார் என்பதற்கு ஆதாரமாக கர்த்தர் அவருக்குத் தரிசனத்தில் தோன்றி, "நீ பயப்படாதே" என்று சொன்னதன் மூலம் அறிகிறோம் (நடபடிகள் 18:9). [3]சிலர் அத்தனே பட்டணத்து பேச்சிலே பவுல் கிரேக்கர்களின் நுணுக்கத்தை பயன்படுத்த முயற்சித்துள்ளதாக அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஆனால் அதன் விளைவு ஏமாற்றமே. தொடர்ந்து வந்த பின் விளைவாக, அவர் கலைநயத்தோடு பேசுவதை விட்டுவிட்டு, எளிமையாக "கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்" மட்டுமே பிரசங்கித்தார் என்று சொல்லுகிறார்கள். [4]கிரேக்க (16:22), வசனத்தின்படி "மாரநாதா" (மாரணாதா) என்றால், "வாரும், கர்த்தாவே" அல்லது "கர்த்தாவே வாரும்."* [5] This phrasing was adapted from the folk lyrics of "He Paid a Debt," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).